13-1-2020
O.S. 178 /2015
வா.சா.1 திரு.ராஜேந்திரன்

வா .சா.1 சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 4,5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.
குறுக்கு விசாரணை..

1 ம் பிரதிவாதி எனது சித்தப்பா. 2,3 ம் பிரதிவாதிகள் 1 ம் பிரதிவாதியின் மகன். 4 ம் பிரதிவாதி எனதுமற்றொரு சித்தப்பா. 5 ம் பிரதிவாதி 4 ம் பிரதிவாதியின் மனைவி. 6 முதல் 11 பிரதிவாதிகள் சொத்தை கிரையம் வாங்கியவர்கள். குப்ப கவுண்டர் எனது தாத்தா. குப்ப கவுண்டருக்கு 5 ஆண் குழந்தைகள், 4 பெண் குழந்தைகள். குப்ப கவுண்டரின் 9 குழந்தைகளில் பழனி கவுண்டர், குழந்தைகவுண்டர், ராஜம்மாள் , துரைசாமி ஆகிய எனது அப்பா ஆகியோர் இறந்து விட்டார்கள். மீதி 5 பேர் உயிருடன் இருக்கிறார்கள். தாவா 1 வதுஅயிட்ட சொத்து எனது தாத்தா குப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்து. அது குப்பகவுண்டரால் கிரையம் வாங்கப்பட்ட சொத்தாகும். அந்த கிரைய ஆவணம்தான் வா.சா-ஆ 1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா 1 வது அயிட்டத்தில் 2.08 ஏக்கர் விஸ்தீரணம் உடையது. தாவா 2 வது அயிட்ட சொத்து சர்வே எண் 224/3 அதன் விஸ்தீரணம் 48 செண்ட் . மற்றொரு சர்வே எண் 224/4 ல் 9 செண்ட் விஸ்தீரணம். தாவா 2 வது அயிட்டம் எனது பெரியப்பா பழனிகவுண்டர் பெயரில் உள்ளது. பழனிகவுண்டருக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் கூட்டு குடும்ப சொத்தாகும்அது அனைவராலும் சேர்ந்து வாங்கப்பட்டது. சர்வே எண் 99/1 பி ஆகிய 3 வது அயிட்ட சொத்து எனது சின்னம்மா லட்சுமி, மற்றும் எனது சித்தப்பா முத்து ஆகியோர் பெயரில் உள்ளது. வா.சா., ஆ 3 முத்து பெயரில் உள்ளது என்பது சரிதான். தாவா 4 வது அயிட்டத்தில் சர்வே எண் 225/1 ல் உள்ள வீடு கதவு எண் 10/159 எனது பெயரில் இருக்கிறது. மேற்படி வீடு எனது பெயரில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த வீடு 5 ம் பிரதிவாதி லட்சுமி என்பவரால் சாமியண்ண கவுண்டர் வகையறாவிடமிருந்து கிரையத்திற்கு வாங்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. அது கூட்டாக கிரையம் வாங்கப்பட்டசொத்தாகும். அது லட்சுமி ஆகிய 5 ம் பிரதிவாதிக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்பது சரியல்ல. தாவாசொத்தில் நாங்கள் கூட்டு சுவாதினத்தில் இருப்பதை காட்ட ஆவணம் என்ன தாக்கல் செய்திருக்கிறீர்கள் என்றால் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. யாருக்கும் பாகம் பிரியவில்லை. ராசம்மாள், ரத்தினம்மாள், பாக்கியம், மைலா ஆகியோர் சேர்ந்து எனது தகப்பனார் மற்றும் அவரது சகோதரர்களுக்கு எதிராக ஒரு பாக வழக்கு தாக்கல் செய்தார்கள் என்பது சரிதான். அ.வ. எண். 229/2016 ல் மேற்படி பாக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. குப்ப கவுண்டருக்கு

பாத்தியப்பட்ட விவசாய நிலம் என்ன என்றால் 2 ஏக்கர் 8 செண்ட். அந்த நிலம் மானாவாரி நிலம்.மற்ற நிலங்கள் குப்ப கவுண்டர் பெயரில் கிரையம் வாங்கப்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் அது அனைவரின் கூட்டுவருமானத்திலிருந்து கிரையம் வாங்கப்பட்ட சொத்தாகும். குப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்ட 2 ஏக்கர் 8 செண்ட் விஸ்தீரணத்திலிருந்து கிடைக்கும் வருமானம் சாப்பாட்டிற்கே போதுமானதாக இருக்காது என்றும் அந்த சொத்தில் கிடைத்தவருமானத்தை கொண்டு மற்ற சொத்துக்கள் கிரையம் வாங்கப்பட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்பது சரியல்ல. 1969 ல் குப்ப கவுண்டர் உயிருடன் இருக்கும்போதே அவரது மகன்கள் 5 பேருக்கும் தலா 40 செண்ட் வீதம் தாவா 1 வது அயிட்ட சொத்தை பாகம் பிரித்து கொடுத்து விட்டதாக சொல்வது சரியல்ல. சர்வே எண் 373/13 ல் கட்டுப்பட்ட சொத்தையும் குப்ப கவுண்டர் தனது மகன்கள் 5 பேருக்கும் தலா 10 செ்ண்ட் வீதம் வாய்மொழியாக பிரித்து கொடுத்து விட்டதாக சொல்வது சரியல்ல. 4ம் பிரதிவாதி மின்சார வாரியத்தில் வேலை பார்த்தார்.தாவா 3 முதல் 5 அயிட்டசொத்துக்கள் 5ம் பிரதிவாதியால் தனித்து கிரையம் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. 52 வருடங்களாக பாகம் கேட்காமல் தற்போது பாகம் கேட்க என்ன காரணம் என்றால் பாகம் எனக்கு இதுவரை பிரியாமல் இருப்பதால் கேட்கிறேன். தாவா சொத்தில் 1/3 பாகம் நான் பாகம் கோரியிருக்கிறேன். குப்ப கவுண்டருக்கு 5 மகன்கள் 4 மகள்கள் என்ற நிலையில் 1/3 பாகம் நான் பாகம் கோருவது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்பது சரியல்ல. எனக்கு எழுத படிக்க தெரியாது. நான் விவசாய கூலி வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் வில்லங்க சான்றில் 1991 ல் ராஜேந்திரன், கொளந்த கவுண்டர், சின்னப்பிள்ளை, பச்சியண்ண கவுண்டர் சர்வே எண் 261/1 சி சொத்தை அடமானம் வைத்திருப்பதாக சொன்னால் கூட்டு சொத்தாக இருப்பதால் அடமானம் வைத்து கடன் வாங்க வேண்டும் என்று சொல்லி மாணிக்கம் சித்தப்பா கேட்டதால் கையெழுத்து போட்டேன். ஆனால் அடமான விவரம் எனக்கு தெரியாது. சர்வே எண் 260/2ஏ சொத்தை ராஜேந்திரன், சின்னப்பிள்ளை ஆகியோர் பச்சியண்ண கவுண்டருக்கு கிரையம் கொடுத்திருப்பதாக சொன்னால் சாட்சி கையெழுத்துபோடும்படி எனது பெரியப்பா பழனிக்கவுண்டர், எனது சித்தப்பா முத்து , மாணிக்கம் ஆகியோர் கேட்டதால் போட்டேன். பத்திரம் படித்து காட்டவில்லை.அவ்வாறு படித்து காட்டவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றும் உண்மையில் கிரையம் கொடுத்திருந்தால் பழனி கவுண்டரின் வாரிசுகள் அனைவரும்கையெழுத்து போட்டிருப்பார்கள் என்று சொல்வது சரியல்ல.1991 ல் சர்வே எண்கள் 224/3,4, 260/2சி ஆகிய சொத்துக்கள் பழனி கவுண்டர், முத்து கவுண்டர், வெங்கடாஜலம், குப்புசாமி ஆகியோர் கையெழுத்து போட்டு ஒரு கிரையம் கொடுத்திருப்பதாக சொன்னால் சரியல்ல.

குப்ப கவுண்டரால் கிரையம் வாங்கப்பட்ட சொத்துக்கள் ஏற்கனவே வாய் மொழியாக பாகம் பிரித்து கொடுக்கப்பட்டு விட்டதாகவும்அவைகளை நாங்கள் ஏற்கனவே கிரையம் கொடுத்து விட்டதாகவும் அதனால் தற்போது பாகம் கோருவது நிலைக்கத்தக்கதல்ல என்பது சரியல்ல. தாவா 4 , 5 அயிட்ட சொத்துக்கள் 4, 5 பிரதிவாதிகளால் தனித்து கிரையம் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றும் அதில் பாகம் கோர எங்களுக்கு உரிமையில்லை என்று சொல்வது சரியல்ல. குப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் அவரது மகள்களுக்கும் பாகம் இருப்பதாகவும் அவர்களை விட்டு விட்டு பாகம் கோருவதும் நிலைக்கத்தக்கதல்ல என்பது சரியல்ல. குப்ப கவுண்டரின் வாரிசுகள் அனைவரையும் தரப்பினர்களாக சேர்க்க வில்லை என்றும் அதன் காரணமாகவும் பிராது நிலைக்கத்தக்கதல்ல என்பது சரியல்ல. தாவா 2,3 அயிட்ட சொத்துக்கள் 4,5 பிரதிவாதிகளால் 52 வருடங்களுக்கு முன்னர் சுய சம்பாத்தியத்தில் கிரையம் வாங்கிய சொத்து என்றும் அதில் நான் தற்போது பாகம் கோருவது நிலைக்கத்தக்கதல்ல என்பது சரியல்ல. குப்ப கவுண்டரின் மகன்கள் பழனி, முத்துக்கவுண்டர் ஆகியோர் தனியாக ஒரு வீட்டில் இருக்கிறார்கள் என்றால் எல்லோரும் கூட்டாகத்தான் இருக்கிறார்கள். எனது அப்பாவும்கொளந்தா கவுண்டரும், துரைசாமி குடும்பமும் ஒரு வீட்டில் தனியாக இருக்கிறோம் என்றால் சரியல்ல. வழக்கிற்காக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. தனித்தனியாக சாப்பாடு சாப்பிட்டு வந்தோம். ஆனால் சொத்து கூட்டாக இருக்கிறது. மாணிக்க கவுண்டர் ஆகிய 4 ம் பிரதிவாதி தாவா சொத்தில் குடியில்லாமல் மேட்டுரில் குடியிருந்து வந்ததாக சொன்னால் 32 வருடங்களாக அவர் தாவா சொத்தில்தான் இருக்கிறார் . வீட்டு வரி ரசீது கதவு எண் 10/59 க்கு தாக்கல் செய்திருக்கிறேன். அதில் யார் குடியிருக்கிறார் என்றால் நான் குடியிருக்கிறேன். கதவு எண் 10/59, 60, 61 ஆகிய வீடுகளுக்கு வரி ரசீது தாக்கல் செய்திருக்கிறேன். மேற்படி வீட்டில் நான்தான் குடியிருக்கிறேன். அந்த வீட்டிற்குரிய வரி, மின்சார கட்டணம் ஆகியவை நான்தான் செலுத்தி வருகிறேன். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி ரசீது நான் குடியிருக்கும் வீட்டு வரி ரசீதுகள் என்றால் சரிதான். மேலும் கதவு எண் 10/61 வீட்டிற்கும் வரி ரசீது தாக்கல் செய்திருக்கிறேன். மாணிக்கம், லட்சுமி ஆகியோர் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதுகள் தாக்கல் செய்யவில்லை என்பது சரிதான். 1978 வருடத்திய முத்து பெயரில் உள்ள கிரைய ஆவணம் வா.சா.ஆ 3 ஆக தாக்கல் செய்திருக்கிறேன். வா.,சா.ஆ 2 பழனி கவுண்டர் பெயரில் ஏற்பட்ட தனித்த கிரைய சொத்து என்பது சரியல்ல. அது கூட்டு வருமானத்தில் வாங்கப்பட்டதாகும். வா.சா.ஆ 4 வெங்கடாஜலம் பெயரில் உள்ள கிரைய ஆவணமாகும். மேற்படி சொத்துக்கள் கூட்டு வருமானத்தில் வாங்கப்பட்ட சொத்துக்கள் ஆகும். எனதுபெயரில் அல்லது எனது தகப்பனார் பெயரில் உள்ள கிரைய ஆவணம்

எதுவும் தாக்கல் செய்திருக்கிறீர்கள் என்றால் என் பெயரில் கிரையம் இல்லாததால் தாக்கல் செய்யவில்லை. எனதுதகப்பனார் பெயரிலும் கிரையம் இல்லாததால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. 1, 2, 4, 5 பிரதிவாதிகள் பெயரில் உள்ள கிரைய ஆவணங்களை தாக்கல் செய்து விட்டு அதில் பாகம் கோருவது நிலைக்கத்தக்கதல்ல என்று சொல்வது சரியல்ல.பிராதில் கோரப்பட்டுள்ள பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் குப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்ட 2.08 ஏக்கரில் மட்டுமே நான்பாகம் கோர உரிமை இருப்பதாகவும் மற்றசொத்துக்களில் பாகம் கோர எனக்கு உரிமையில்லை என்றும் சொல்வது சரியல்ல. எங்கள் பிராது தள்ளுபடி செய்யவேண்டியதாக இருக்கிறது என்பது சரியல்ல.

மறு விசாரணை..இல்லை.

Sd/- Rajendran Sd/- III ADJ Salem.